<u>DEPOSITION OF WITNESS</u>
<u>(Chapter XXIII Code of Criminal Procedure Judicial Form No.53)</u>
<u>IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, SIVAGANGAI.</u>

| | |
|---|---|
| Case No. | CC . 145/2021 |
| Deposition of Witness for | Prosecution PW 1 |
| Name | சந்திரசேகரன் |
| Father / Husband Name | சொக்கன் |
| Village | திருநகர் |
| Taluk | காளையார்கோவில் |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the date of 10th February 2025.

---

<u>(எதிரிகள் ஆஜரில்லை. BNSS பிரிவு 355ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).</u>

**<u>முதல் விசாரணை:-</u>**

1) நான் தற்சமயம் சென்னையில் வசித்து வருகிறேன். நான் தமிழக காவல்துறையில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 2018 ம் ஆண்டு பணி ஓய்வு பெற்றுவிட்டேன். வழக்கு எதிரிகளை தெரியும் . வழக்கு 1 வது எதிரி என் உடன் பிறந்த அண்ணன். வழக்கு 2 வது எதிரி , 1 வது எதிரியின் மகன் . 3, 4 எதிரிகள் 1 வது எதிரியின் பேரன்கள். நான் எனது பணி ஓய்விற்கு பிறகு சொத்துகளை பார்பதற்காக எனது சொந்த ஊரான காளையார்கோவில் வந்தபோது சொத்து சம்பந்தமாக சகோதரர்களுக்குள் பிரச்சனை வந்தது. மேற்படி இடப்பிரச்சனையை பேசி தீர்த்துக்கொள்ளலாம் என கடந்த

Webcopy

15.04.2021ம்தேதி என்னை எனது 3 வது அண்ணனான முத்து வரச்சொன்னதன் பேரில் நான் அவர் வீட்டிற்கு சென்று பேசும்போது வழக்கு 1 ,2 எதிரிகளுக்கும் முரண்பட்ட பேச்சு வந்ததால் எனது 3 வது அண்ணணான முத்துவை ஒதுங்கிக் கொள் என வழக்கு எதிரிகள் சொன்னவுடன் பேச்சு வார்த்தையில் உடன்படிக்கை ஏற்படவில்லை. அதனால் நான் சிவகங்கை காவல் துறை துணை கண்காணிப்பாளரிடம் இடப்பிரச்சனை சம்பந்தமாக புகார் மனு கொடுத்துவிட்டு மதியம் 03.00 மணியளிவில் காளையார்கோவில் வீட்டிற்கு வந்து விட்டேன் . நான் கொடுத்த புகாரின்பேரில் விசாரணைக்காக காவல்நிலையத்திலிருந்து வருவார்கள் என எதிர்பார்த்துக்கொண்டு நானும் எனது மனைவி மங்கையர்கரசி என்பவரும் வீட்டில் இருந்தபோது அன்றே 15.04.2021 ம் தேதி மாலை 05.45 மணியளவில் நானும் என் மனைவி வீட்டிலிருந்தபோது சத்தமாக இருந்தது. வெளியில் வந்து பார்த்தபோது வழக்கு எதிரிகள் 4 நபர்களும் அவர்களுடன் இன்னும் சிலரும் வந்து என்னுடைய காம்பவுண்ட் சுவரை இடிப்பது போல் வந்து கடப்பாரை, உள்ளிட்ட ஆயுதங்களை வைத்து சுவற்றில் தாக்கிக்கொண்டு அருவருக்கத்தக்க வார்த்தைகளில் பேசினார்கள்.

2. அவர்கள் JCB , Bullot , Tavera Car ஆகியவற்றில் வந்திருந்தார்கள் .எதிரிகள் என்னை தேவடியா மகனே வெளியே வாடா என்றும் கொல்லாமல் விடமாட்டேன் என்றும் எங்கைகயில் தான் உனக்கு சாவு என்றும் , நீ எப்படி சென்னைக்கு போறனு பார்ப்போம் என்றும் சத்தம்போட்டார்கள் . எதிரிகள் சத்தம்போட்டதும் பிரச்சனை என எண்ணி JCB யை அதன் ஓட்டுனர் எடுதது சென்றுவிட்டார். எதிரிகள் என் சகோதரர் , குடும்பத்தார்கள் என்பதால் நான் என் வீட்டு காம்பவுண்டிற்கு வெளியில் வந்தேன்.

3. 1 வது எதிரி என்னைப் பார்த்ததும் இவனை அடிடா என்று சொல்லி இரும்பு ராடை வைத்து என் முன்னந்தலையில் ஓங்கி அடித்தார். 2 வது எதிரி கட்டையை வைத்து எனது இருபக்க தோள்களிலும், உடம்பிலும், முகத்திலும் மாறி , மாறி அடித்தார். 3, 4 எதிரிகள் என் கைகளை பிடித்து முறுக்கி என்னை தாக்கினார்கள். மேற்படி சம்பவத்தால் எனக்கு ஏற்பட்ட காயத்திலிருந்து ரத்தம் வழிந்ததால் என் மனைவி கத்திக்கொண்டு ஓடி வந்தபோது அவரையும் என் அருகில் வரவிடாமல் தடுத்தார்கள். எதிரிகள் சென்றுவிட்டார்கள். என்னை எனது மனைவி , நண்பரான

webcopy

மாரிமுத்து உதவியுடன் காளையார்கோவில் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். அங்கு வைத்து எனக்கு முன்னந்தலையில் தையல் போடப்பட்டது . நான் மருத்துவமனையில் இருந்தபோது காளையார் கோவில் சார்பு ஆய்வாளர் அங்கு வந்து என்னை விசாரித்து நான் கொடுத்த புகார் வாக்குமூலத்தை பதிவு செய்தார். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்கு மூலம் நான் கொடுத்ததுதான் அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். **புகார் வாக்குமூலம் அ.சா. ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்பு மேல் சிகிச்சைக்காக என்னை சிவகங்கை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் அனுமதித்தார்கள்.அங்கு 3 நாட்கள் சிகிச்சையிலிருந்த மேல் சிகிச்சைக்காக மதுரை ராஜாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

குறுக்கு விசாரணைக்கு விலக்கு அளித்து வேறு ஒரு தேதி கேட்டு , மனு தாக்கல் செய்யப்பட்டு , அந்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. எனவே எதிரி தரப்பு குறுக்கு விசாரணை வாய்பளித்தும் இல்லை .

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், B.Sc., B.L., 10.02.2025,**
நீதித்துறை நடுவர் எண்.1,
சிவகங்கை.

Web copy